# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில; A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 12.04.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கணினி அறிவியல் துறை, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், ஐ.ஐ.டி. புதுடெல்லி ஆகியன இணைந்து “மெய்நிகர் ஆய்வகங்கள்” என்ற தலைப்பிலான ஒரு நாள் கருத்துப்பட்டறை (11.4.2019) அன்று அறிவியல் வளாக கருத்தரங்க அறையில் நடைபெற்றது.




அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு இக்கருத்துப்பட்டறையை துவக்கி வைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் அழகப்பா பல்கலைக்கழகம் பெற்றுள்ள பல்வேறு தர மதிப்பீடுகளையும், அங்கீகாரங்களையும் பட்டியலிட்டார். மெய்நிகர் ஆய்வகங்களின் முக்கியத்துவத்தினையும் அதன் மூலம் மாணவர் சமுதாயம் அடையும் பலன்களையும் எடுத்துக்கூறினார். மேலும் இது போன்ற கருத்துப்பட்டறைகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்தப்படும் என்று கூறினார்.

புதுடெல்லி, ஐ. ஐ. டி.-யின் மெய்நிகர் ஆய்வக ஒருங்கிணைப்பாளர் திரு. அக்ஷத் அகர்வால் கருத்துப் பட்டறையில் முக்கிய உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் மாணவர்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்து கணினி மற்றும் இணையம் மூலமாக இந்தியாவிலுள்ள தலைசிறந்த ஆய்வகங்களை பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்வதே இக்கருத்துப்பட்டறையின் உயரிய

நோக்கமாகும் என்று கூறினார். தமிழ் நாட்டிலேயே காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தான் முதன் முறையாக இக்கருத்துப்பட்டறை நடத்தப்படுகிறது என்று கூறினார். மேலும் தரம் மிக்க அழகப்பா பல்கலையுடன் ஐ. ஐ. டி. புது டில்லி இணைந்து பணியாற்றுவதில் பெருமையடைவதாகக் கூறினார்.

முன்னதாக கணினி அறிவியல் துறைத் தலைவர் பேரா. இராமராஜ் அனைவரையும் வரவேற்றார். துறைப் பேராசிரியர் திரு.மெய்யப்பன் நன்றி கூறினார். கணினி அறிவியல் துறை மற்றும் கணினி தளவட மேலாண்மை துறைகளை சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கு பெற்றனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்